# ஊழிய அழைப்பு - கர்த்தர் திறந்த கதவு

இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து என்னையறியாமலேயே வேதத்தைப் படித்து அறியவும், கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஒரு வாஞ்சையும் என்னை மேற்கொண்டது. அந்த சமயத்தில் சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் கிராமங்களுக்குச் சென்று இந்து பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்து வந்தேன். ஆனால் இதிலே எனக்கு திருப்தி இல்லை. ஆனாலும் இனி நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டும் என்ற உறுதி வலுப்பட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எனது அக்கா வேலை பார்க்கும் முக்கூடல் என்ற ஊரில் ஒரு மாதம் தங்கி இருக்க வேண்டியதாயிற்று. அது ஒரு இந்துக்கள் நிறைந்த ஊர். கிறிஸ்தவ ஆலயமே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஞாயிற்றுக் கிழமைகளில் நானாக பாட்டுப்பாடி ஜெபிப்பேன். அந்த சமயத்தில் அங்குள்ள சிறுவர்கள் தானாக வந்து எங்களுக்கும் இயேசு சுவாமியைப் பற்றிய பாடல் சொல்லித் தாருங்கள் என்று ஆவலாய் கேட்டார்கள். அது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. அன்றிலிருந்து தினமும் அவர்களுக்கு பாட்டு, வசனம் கதை சொல்லிக் கொடுக்கஆரம்பித்தேன். பிள்ளைகள் தினமும் வருவார்கள். அப்படிப்பட்ட வாஞ்சையுள்ள இந்துக்கள் நிறைந்த இடத்தை அன்று தான் முதல் முறையாகக் கண்டிருக்கிறேன். அந்தச் சமயம் கர்த்தர் என்னோடு பேசினார். நான் கண்ட தரிசனத்தையும், இதையும் பார்க்கும்போது சரியாக இருந்தது. அப்போது எனக்கு ஆசை, கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு ஏசுவைப் பற்றி சொல்லும் போது இப்படி ஒரு வாஞ்சை இல்லை. எனவே இந்து பிள்ளைகளுக்கு மாத்திரம் ஏசுவைக் குறித்து சொல்லலாம் என நினைத்தேன்.

ஒரு மாதம் கழிந்த பின், திரும்பவும் என்னுடைய சொந்த ஊர் நாசரேத் வந்தேன். அந்த சமயம் F.M.P.B. டேனிஷ்பேட்டை வருடாந்திர கூட்டத்திற்கு என்னை அழைத்தார்கள். ஆனால் என்னுடைய வீட்டில் விடுவதற்கு மிகவும் மறுத்தார்கள். நான் அந்த வருடத்தில் அப்படிப்பட்ட கூட்டத்திற்கு போவது கர்த்தரின் சித்தமாயிருந்தபடியினால் அவரே என்னை அழைத்துச்சென்றார். அந்த 1971 – ம் ஆண்டு வருடாந்திர முகாமின் Theme Song - **“இருள் சூழும் காலம் இனி வருதே”** என்பது. இந்தப் பாடல் எழுதப்பட்ட நோக்கத்தைச் சொல்லி கற்றுக் கொடுத்தார்கள். அதோடு பிரசங்கமும் ஊழியத்திற்கு அழைப்பும் தரப்பட்டது. அன்று கர்த்தர் என்னை இப்படிப்பட்ட ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார் என்பதை உண்மையாய் அறிந்து கொண்டேன். அடுத்த ஆண்டு பண்ணை–விளையில் நடந்த கிதியோனியர் முகாமுக்குச் சென்றேன். அந்த கூட்டத்தில் மிஷனெரி ஊழியத்திற்காக மாதந்தோறும் ரூ.1 கூட காணிக்கையாக கொடுக்கலாம் என பிரசங்கித்தார்கள். ஆதலால் என்னால் இயன்ற காணிக்கை மாதத்திற்கு ரூ 1 என வாக்குறுதி எழுதிக் கொடுத்தேன். ஆனால், என்னால் அதைக் கொடுக்கமுடியவில்லை.

வீட்டிலுள்ள அடுப்புக் கரியை சேர்த்தும், அக்காமார்கள் சினிமாவுக்கு போகும்போது, நான் போகாமல் அந்தப் பணத்தை வாங்கி சேர்த்து வைத்தும், ஒரு வேளை சாப்பிடாமல் வீட்டில் அரிசி வாங்கி அதை அம்மாவிடம் விற்றும், மாதந்தோறும் ரூ.1 சந்தா F.M.P.B. - க்கு செலுத்தினேன். ஒரு மாதம் எனக்கு மாத சந்தா ரூ 1 கொடுக்க முடியவில்லை. அப்பொழுது நான் மிகுந்த கவலையோடு ஆடுகளை மேய்த்துக் கொண்டு, காட்டிற்கு சென்றேன். அங்கு திடீரென்று காற்றில் ஒரு ரூபாய் என் முன்னால் பறந்து வந்தது. அதைக் கொண்டுபோய் கொடுத்தேன். ஆனாலும், **“இப்படிப்பட்ட கனமான ஊழியத்திற்கு எந்த விதத்திலும் நான் தகுதி இல்லையே ஆண்டவரே! ஆனாலும் உமக்குச் சித்தமானால் பயன்படுத்தும்”** என்று ஜெபித்தேன். ஆனால் ஊழியத்திற்கு எப்படி செல்லவேண்டும் என தெரியவில்லை.

அந்த ஆண்டில் எனக்கு என் வீட்டில் மிகவும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். வட இந்திய ஊழியத்திற்கு போகக்கூடாது. இங்கிருந்து இப்பொழுது ஊழியம் செய்வது போல் செய் என்று சொல்லி வந்தார்கள். மிகுந்த போராட்டத்தோடு சில மாதங்கள் கழிந்தது. பின்பு எனக்கும் பின்மாற்றம் வந்தது. ஆனாலும் கர்த்தர் என்னை விடவில்லை, என்னை தெரிந்தெடுத்த நோக்கத்தை நிறைவேற்ற யோனா சம்பவத்தினால் என்னோடு பேசினார். அன்றிலிருந்து கர்த்தரை குறித்த பயம் எனக்கு வந்தது. நாசரேத்தில் நடைபெற்ற F.M.P.B. ஜெபக்குழுவில் அப்ளிகேஷன் வாங்கக்கூட ரூ.3 தர மறுத்து விட்டார்கள். அப்பொழுது எனது சட்டைத் துணி ஒன்றை ரூ.3 –க்கு விற்று, அப்ளிகேஷன் வாங்கி நிரப்பி அனுப்பினேன். 1973 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 – ம் தேதி F.M.P.B லிருந்து இண்டர்வியூக்கு அழைப்பு வந்தது. ஆனால் என் வீட்டில் அம்மாவும் தம்பியும் விடமாட்டோம் என்று மறுத்தார்கள்.

காலை 11 மணிக்கு பஸ் என்றால் 10 மணி வரையும் என்னை விட மறுத்துவிட்டார்கள். ஆனால் அன்று எதுவுமே பேசாமல் கர்த்தரிடம் ஒரு வார்த்தை மட்டும் சொல்லி ஜெபித்தேன். **"ஆண்டவரே, நீர் என்னை ஊழியத்திற்கு என்று அழைத்தது உண்மையானால் மட்டும் இன்டர்வியூக்கு சென்னைக்கு அழைத்துச் செல்லும், இல்லாவிட்டால் வேண்டாம் ஆண்டவரே"** என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்.

எதிர்பாராதவிதமாக பக்கத்து வீட்டு அக்கா எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். **"ஏன் இப்படி திட்டிக் கொண்டிருக் கிறீர்கள், ஒரு பிள்ளையை ஊழியத்திற்குத்தான் விட்டால் என்ன?"** என்று பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் கர்த்தர் தாமே எனது அம்மாவோடும் தம்பியோடும் பேசினார். சந்தோஷமாக என்னை சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

கர்த்தர் தாமே காரியங்களை வாய்க்கச் செய்தார். இன்டர்வியூவில் பல கேள்விகள் கேட்கப்பட்டாலும், ஏற்ற பதிலை சரியாக சொல்ல கர்த்தர் கிருபை செய்தார். என்னை செலக்ட் பண்ணிவிட்டார்கள். ஆனால் இந்த செய்தி தெரிந்ததும் என் வீட்டில் என்னை மிகவும் வெறுத்தார்கள். பகைத்தார்கள். பல விதமான சூழ்நிலைகளைச் சொல்லி, அனுப்ப மறுத்தார்கள். எனக்கு ஊழியத்தின் காரியமாக மிகவும் ஆலோசனைக் கொடுத்த நாசரேத் திருமதி. ரூபி ஜான்சன் அவர்கள் பொறுமையாக இரு. கர்த்தருக்குச் சித்தமானால் தடைகளைத் தாண்டி முன்வர உதவுவார் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

ஆனாலும் எனக்குள் போராட்டம். எத்தனையோ பிள்ளைகள் கெட்ட காரியங்களுக்காக வீட்டை விட்டு ஓடி விடுகிறார்களே, நாமும் தெரியாமல் கர்த்தருக்கென்று ஓடி விடலாம் என்றே என் மனதில் நினைத்தேன். வீட்டில் அனுமதியோடு வந்தால் தான் ஊழியத்திற்கு நல்லது என்பதாகக் கூறினார்கள். எனவே அன்று முதல் அம்மா சரியாக ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் என்னையும் இன்னும் தகுதிப்படுத்தும்படியும் ஜெபித்து வந்தேன். ஆனால எனக்கு இரண்டு முறை F.M.P.B. - யிலிருந்து ஊழியத்திற்கு அழைப்பு வந்தும் என்னால் போக முடியாதது மிகுந்த கவலையும், சோர்வுமாக இருந்தது. என்னோடுள்ள சகோதரிகள் யாவரும் ஊழியத்திற்குசென்று விட்டதால் மிகுந்த சோர்வுடன் இருந்தேன்.

ஒரு நாள் ஜெபித்து விட்டு அம்மாவிடம் சில வார்த்தைகள் பேசினேன். அப்பொழுது யோனா கதையை அம்மாவிடம் சொல்லி **"என்னை ஊழியத்திற்கு விடமாட்டேன் என்றால் நான் போகவில்லை; ஆனால், ஒன்றை மாத்திரம் சொல்கிறேன் திரும்பவும் அதே வியாதியைத் தந்து கர்த்தர் என்னை எடுத்துக் கொள்வார். அப்பொழுது கவலைப்படாதீர்கள்"** என்று சொன்னேன். அது அம்மாவை கலங்க வைத்தது.

என் அக்காமார்களுக்கு திருமணம் ஆகாததால் அதை கவனிக்க சொந்தக்காரர்கள் யாரும் இல்லாததால் கவலையாய் இருப்பார்கள். அம்மாவோடே நானும் சில ஆண்டுகள் கூடவே இருந்ததினால் நானும் அம்மாக் கவலையைப் புரிந்துகொண்டேன். நானும் பொருத்தனைப் பண்ணி ஜெபித்தேன். எதிர்பாராத விதத்தில் ஒரு அக்காவுக்குத் திருமணம் வைக்க கர்த்தர் உதவினார். ஒரு அக்காவுக்கு வேலை நிமித்தமாக அரேபியா போக வாய்ப்புக் கிடைத்தது. கர்த்தரின் ஊழியத்திற்கு முன்வரும்போது தம்முடைய பிள்ளைகளின் குடும்பத்தை ஆசீர்வதிக்கிறார் என்பதை என் அம்மாவும் உணர ஆரம்பித்தார்கள்.

இனி ஊழியத்திற்கு அழைப்பு வரும்போது போ என்பதாகக் கூறினார்கள். ஆனாலும் முழு மனதுடன் சொல்லாமலே இருந்தார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் 1975 - ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அலகாபாத் கல்வாரி பைபிள் ஸ்கூல் போக எனக்கு அழைப்பு வந்தது. திருமணமான என் அக்கா அந்தச் சமயம் பிரசவத்திற்காக வந்திருந்தார்கள். அவர்கள் பொருத்தனை பண்ணிக் கொண்டது **"சுகமான பிரசவத்தை ஆபத்தின்றி தாரும் ஆண்டவரே, ஊழியத்திற்கு போகிறேன் என்கிற பிள்ளையை உமக்கே தருகிறேன்"** என்று ஜெபித்துள்ளார்கள். ஆச்சரியப்படத்தக்கதாய் கர்த்தர் சுகமான பிரசவத்தைக் கட்டளையிட்டார். ஊழியத்திற்குப் புறப்பட எனக்கு மூன்று நாட்கள் மட்டுமே இருந்தது. அம்மாவிடம் சொல்லவே பயந்து போய் இருந்தேன். ஆனால் அம்மா எனக்கு போக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, மகிழ்ச்சியாய் என்னை அனுப்பிவைத்தார்கள். இது என்னால் நம்பவே முடியவில்லை.

**"நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்."**

**அப்போ.** 20 : 24